

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கடந்த 6ம் தேதி நெல்லையில் வைத்து கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியை சேர்ந்த தயா சங்கர், வேல்ஆறுமுகம், பிரேம்குமார், சபரிமலை வாசன், மீனாட்சி சுந்தர், ரவி, மாரியப்பன், இசக்கி ஐயப்பன் ஆகியோர் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கானை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். நிகழ்வில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கண்ணன், ரியல் சுரேஷ், ஆசிரியர் கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டப் பொருளாளர், நகர் ஒன்றியக் கிளை நிர்வாகிகள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

### திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!!

தூத்துக்குடி, பிப். 14 -

நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் இரண்டாவது முறையாக வெற்றிபெற்ற கனிமொழி கருணாநிதி எம்.பி. பல்வேறு தேதிகளில் தொகுதி முழுவதும் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்துள்ளார்.

இதன் நிறைவாக திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் திருச்செந்தூர், உடன்குடி ஒன்றியங்களில் உள்ள பகுதிகளில் 16.02.2025 அன்று வாக்காளர்களை நேரடியாக சந்தித்து நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணி நல்லூர்;, 5.20 மணி அம்மன்புரம், 5.40 மணி கானம் பேரூராட்சி வள்ளிவிளை, 6 மணி பூச்சிக்காடு, மாலை 6.20 மணி காயாமொழி, மாலை 6.40 மணி நடுநாலுமூலைக்கிணறு, இரவு 7.00 மணி கீழ நாலுமூலைக்கிணறு, இரவு 7.20 மணி ந.முத்தையாபுரம், இரவு 7.50 மணி பரமன்குறிச்சி பஜார், இரவு 8.05 மணி வெள்ளாளன்விளை, இரவு 8.20 மணி உடன்குடி பஜார் இரவு 8.40 மணி செட்டியாபத்து, இரவு 9 மணி மெஞ்ஞானபுரம் ஆகிய ஊர்களில் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.



இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஒன்றிய, பகுதி செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

### சீர்காழி நகர இளைஞரணி அமைப்பாளர்

# எம்.ஆர்.ஆர். ராஜசேகரன் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மயிலாடுதுறை, பிப். 14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர கழக முன்னாள் பொறுப்பாளர் மறைந்த எம்.ஆர்.ராதா மகனும், பொறியாளர் எம்.ஆர்.ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணைச் செயலாளர் எம்.ஆர். ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் சகோதரரும், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகரன் கணவரும் சீர்காழி நகர இளைஞரணி அமைப்பாளருமான எம்.ஆர்.ஆர்.ராஜசேகரன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த எம்.ஆர்.ஆர். ராஜசேகரனுக்கு மனைவி துர்கா பரமேஸ்வரி ராஜசேகரன் உள்ளார். சீர்காழியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த எம்.ஆர்.ஆர். ராஜசேகரன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி. கீதாஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, பிப்.14-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி. கீதாஜீவன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தூத்துக்குடி வடக்கு மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் 21.02.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில், கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.



இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் ஜி. செல்வராஜ் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளகேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி.

கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அமைச்சர் பி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

### ஒன்றியச் செயலாளர் ஜெயராமன் தலைமை! முதல்வர் தளபதி பிறந்த நாளை முன்னிட்டு

# சிவகங்கை தெற்கு ஒன்றியத்தில் கிராமங்கள் வாரியாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## தெற்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் முடிவு!

சிவகங்கை, பிப். 14 -

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தெற்கு ஒன்றிய அலுவலகமான தலைவர் கலைஞர் அறிவாலயத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய துணைச் செயலாளர் பஞ்சவர்ணம் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் திருமதி மார்க்ரெட் கமலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் சிங்கமுத்து, நிர்வாகிகள் மனோகரன், பொருளாளர் பாண்டியராஜன், மகளிரணி மஞ்சுளா, ராஜாங்கம், இளைஞரணி தங்கம் அழகு சுந்தரம், பிரவீன் குமார் உட்பட பலர் பேசினர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. வருகிற மார்ச் 1ம் தேதி கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை தெற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கழகக் கொடி ஏற்றியும்,நலத்திட்ட உதவிகள் வழங்கி, கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது.

2. நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சிவகங்கை தெற்கு ஒன்றியத்தில் அதிக அளவில் வாக்குகள் பெறும் வகையில் தேர்தல் பணியாற்றுவது என்று தீர்மானிக்கப் பட்டது.

3. தெற்கு ஒன்றியச் செயலாளர் ஜெயராமனை கழகத் தலைவர் தளபதி அவர்கள் சென்ற மாதம் 21ஆம் தேதி காரைக்குடியில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் கட்சி பணியினை சிறப்பாக தலைமைகழகத்தின் கட்டளையின்படி நடத்தியதற்கு பாராட்டிய முதல்வருக்கு நன்றி தெரிவித்தும் உறுதுணையாக இருந்த மாவட்டச் செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இந்த கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயராமன் கட்சிப்பணிகளை சிறப்பாக நடத்தியதற்காக முதல்வரின் பாராட்டினை பெற்றதற்காக ஒன்றிய நிர்வாகிகள் வாழ்த்திப் பேசினார்கள்.


